TOKIO MARINE
INSURANCE GROUP

# சேவை வழிகாட்டி



tokiomarine.com
Life & Health | Property & Casualty
Tokio Marine Life Insurance Malaysia Bhd. (457556-X)

# உங்களால் எங்களது முகவரிடமிருந்து என்னென்ன விதமான சேவைகளை எதிர்பார்க்க முடியும்?

எங்களது நிறுவனம், எங்களது முகமை ஆட்கள் வாயிலாக, வங்கிக் கூட்டாளிகள் வாயிலாக, இணைய வழியாக என பல வழிகளில் ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களை வழங்குகிறது. நீங்கள் எங்களது முகவர்களிடமிருந்து ஒரு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை வாங்க விரும்பினால், உங்களால் இது போன்ற மதிப்புக்-கூட்டுச் சேவைகளைப் பெற்று மகிழ முடியும்.

## 1• நீங்கள் பாலிசி வாங்கும் முன்

### பதிவுபெற்ற முகவர்களிடம் மட்டுமே பாலிசிகளை வாங்குங்கள்

முகவர் பதிவு பெற்றவரா என்பதை, லைஃப் இன்சூரன்ஸ் அசோசியேஷன் ஆஃப் மலேசியாவின் (LIAM) இணையதளம் வாயிலாகவோ அல்லது குறுஞ்செய்திச் சேவை (SMS) வாயிலாகவே உங்களால் தெரிந்து கொள்ள முடியும். மேல் விவரங்களுக்கு, வருகை தாருங்கள் http://www.liam.org.my/index.php/customer-zone/know-your-agent.

### சரியான காப்பீட்டுத் திட்டம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில் உங்களுக்கு உதவுதல்

- உங்களது காப்பீட்டுத் தேவைகளையும், நிதி குறிக்கோள்களையும் புரிந்து கொள்வதற்காக, ‘வாடிக்கையாளர் உண்மைநிலை காணுதல்’ படிவத்தை உங்களோடு சேர்ந்து பூர்த்தி செய்தல்
- உங்களது தேவைகளை மதிப்பிட்டுக் கொண்ட பிறகு, உங்களுக்குப் பொருத்தமான காப்பீட்டுத் திட்டத்தை சிபாரிசு செய்தல்

### திட்ட அம்சங்களை விளக்கிச் சொல்லுதல்

- திட்ட அம்சங்கள், கொடுக்கத்தக்க பலன்கள், விதிவிலக்குகள், பிரிமியங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை விளக்கிச் சொல்லுதல்
- நீங்கள் தகவல் தெரிந்து முடிவெடுப்பதற்கு உங்களுக்கு உதவுவதற்கும், திட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்க வசதி செய்து தரவும், ‘திட்ட வெளிப்படுத்தல் தாளை’ வழங்குதல்

## 2• நீங்கள் பாலிசி ஒன்றை வாங்க முடிவு செய்யும் போது

### பாலிசி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதில் உங்களுக்கு உதவுதல்

- முன்மொழிவுப் படிவத்தில் உள்ள கேள்விகளுக்கு முழுமையாகவும், துல்லியமாகவும் பதிலளிப்பதன் முக்கியத்துவத்தை விளக்கிச் சொல்வது
- நீங்கள் முன்மொழிவுப் படிவத்தில் கையொப்பமிட்ட பிறகு உங்களது விண்ணப்பத்தைக் காப்பீட்டிற்குச் சமர்ப்பித்தல்
- அவசியமானால், எங்களது பட்டியலில் உள்ள சிகிச்சை மையங்களில் ஒன்றுக்குச் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்தல்
- மரணம் நேர்ந்து விடுகிற நிலையில், பாலிசிப் பணத்தை உங்களால் பலனடைபவர்களே பெற்றுக் கொள்கிறார்கள் என்பதை உறுதி செய்வதற்காக, வாரிசு நியமன வசதி குறித்தத் தகவல்களை வழங்குவதல்

### பாலிசி விதிகள் மற்றும் நிபந்தனைகளை விளக்கிச் சொல்லுதல்

- உங்களது பாலிசி ஆவணம் (நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ) 14 நாட்களில் கொடுக்கப்படும்
- நீங்கள் வாங்கியிருக்கிற சரியான திட்டம் இது தான் என்பதை உறுதி செய்வதற்காக, பாலிசியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை உங்களோடு சேர்ந்து படித்துப் பார்ப்பார்கள்

## 3• பாலிசி காலத்தின் போது

### தொடர்ச்சியாகப் பாலிசி சேவையளித்தல்

- பாசிலியைப் புதுப்பிப்பதில் உதவி செய்தல்.
- தொடர்ச்சியாக சேவை வழங்குதல், உதாரணமாக, பாலிசியை மாற்றியமைத்தல், முகவரி மாற்றம் மற்றும் பிரீமியம் காலக்கெடு மாற்றம். உங்கள் ஏஜெண்ட் நிறுவனத்தை விட்டுச் சென்றுவிட்டால், உங்களுக்குச் சேவையளிப்பதற்காக நாங்கள் புதியதோர் முகவரை நியமிப்போம்

### காப்பீட்டுக் கோரிக்கையின் போது உதவி செய்தல்


காப்பீட்டுக் கோரிக்கை ஒன்றைப் பூர்த்தி செய்வது குறித்த எப்போதுமுள்ள நடைமுறைகளில் உங்களை வழிநடத்துதல்.

# இப்போது, நீங்கள் உங்களது விரல் நுனிகளிலேயே காப்பீட்டு முகவர்களின் நிலையைத் தெரிந்து கொள்ளலாம்!


## இணையம் வழியாக

ஏஜெண்டின் MyKad/Old IC/LIAM எண்ணைப் பதிவு செய்யுங்கள்





MyKad அல்லது LIAM No. பதிவு செய்க, தேடல் முடிவு




பதிவுபெற்ற முகவர்




பதிவு பெறாத முகவர்


## SMS வழியாக

| | |
|---|---|
| மொழி | E-ஆங்கிலம், M-மலாய் மொழி, C-சீனம் |
| தேடல் | A-MyKad/Old IC, B-LIAM No. |





டைப் செய்க:
LIAMENQ <இடைவெளி> மொழி(E/M/C) <இடைவெளி> தேடல்(A/B) <இடைவெளி> (MyKad/Old IC/LIAM No.) மற்றும் SEND என 63633 என்ற எண்ணுக்கு அனுப்புக

SMS கட்டணம் ஒரு செய்திக்கு 0.15 sen பொருந்தும்




பதிவுபெற்ற முகவர்





பதிவு பெறாத முகவர்

எங்களது முகவரின் சேவைகள் உங்களுக்குத் திருப்தியாக இல்லை என்றாலோ, அல்லது எங்களது நிறுவனத்தில் இருந்து கூடுதல் ஆதரவு அவசியமானாலோ, நீங்கள் எங்களை 03-2059 6188 என்ற எண்ணில் அழைக்கலாம் அல்லது customercare@tokiomarinelife.com.my என்ற மின்னஞ்சல் முகவரியில் கடிதம் எழுதி அனுப்பலாம்.

## வாடிக்கையாளர் இணையதளம்

உங்களது பாலிசி குறித்த தகவல்களை ஆன்லைனில் பார்த்துக் கொள்ள தயவுசெய்து https://www.tokiomarinelife.com.my/eServices என்ற முகவரியில் எங்களது வாடிக்கையாளர் இணையதள வசதிக்கு வருகை தாருங்கள்




*To Be a* ***Good Company***

Tokio Marine Life Insurance Malaysia Bhd.
(457556-X)

Licensed under the Financial Services Act 2013 and is regulated by Bank Negara Malaysia.

Ground Floor, Menara Tokio Marine Life,
189, Jalan Tun Razak, 50400 Kuala Lumpur.
T : (603) 2059 6188
F : (603) 2162 8068
tokiomarine.com

*June 2016*